**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.**

**முன்னிலை:- திரு.S.முத்துராமன், B.L.,**

**சார்பு நீதிபதி, மன்னார்குடி.**

2055 திருவள்ளுவராண்டு, ஸ்ரீகுரோதி வருடம், ஆவணி மாதம் 19 ம் நாள்

2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4 ம் நாள் புதன் கிழமை

**நிறைவேற்று மனு எண்.104/2020-இன் ஏ.சி.பி. எண்.169/2019**

ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட்,
பேரளம் கிளைக்காக அதன் பொது அதிகாரம்
பெற்ற முகவர் ... மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்

/எதிர்/

1. கண்ணதாசன்
2. சண்முகபிரியா .......எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது, இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு 12.08.2024 ம் தேதியன்று வந்தபோது நிறைவேற்று மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் நோட்டீஸ் சார்வு செய்யப்பட்டுள்ள நிலையில் அழைத்தும் ஆஜராகவில்லை என்பதால் தோன்றாதரப்பினராக அறிவிக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதாலும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்த பின்னர், இன்று (04.09.2024) இந்நீதிமன்றம் வழங்கும்........

**உத்தரவு**

திருவாரூர், நடுநிலை தீர்ப்பாளர் நீதிமன்றத்தில் ஏ.சி.பி.எண்.169/2019-ல் காலம் 7 மற்றும் 8 காலங்களில் கண்ட கூடுதல் தொகையான ரூ.8,37,537/-ஐ பின்வட்டியுடன் வசூல் செய்து தரவேண்டி எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்பியும், ஆஜர் ஆகாத வரை அடமானம் செய்யப்பட்டுள்ள ஸ்தாவர சொத்தை மதிப்பு நிஷ்கரிக்க நோட்டீஸ் அனுப்பி மதிப்பு போட்டு இஸ்தியார் அனுப்பி மனுவில் கண்ட சொத்தை ஏலம் போட்டு அதன் மூலம் கிடைக்கும் தொகைகளை உளவடைத்துக் கொள்ள உத்தரவிட வேண்டி கட்டளை 21 விதி 66 மற்றும் 72-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. நிறைவேற்று மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்:-**

திருவாரூர், நடுநிலை தீர்ப்பாளர் நீதிமன்றத்தில் 30.01.2020 ம் தேதியன்று ஏ.சி.பி.எண்.169/2019-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தம்

தொகையான ரூ.7,69,545/-ம் அதில் கூடுதல் தொகையான ரூ.8,37,537,/-க்கு பின்வட்டியுடன் வசூல் செய்து தரவேண்டி 1ம் எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ் அனுப்பியும், ஆஜர் ஆகாத வரை அடமானம் செய்யப்பட்டுள்ள ஸ்தாவர சொத்தை மதிப்பு நிஷ்கரிக்க நோட்டீஸ் அனுப்பி மதிப்பு போட்டு இஸ்தியார் அனுப்பி மனுவில் கண்ட சொத்தை ஏலம் போட்டு அதன் மூலம் கிடைக்கும் தொகைகளை உளவடைத்துக் கொள்ள உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** 1ம், எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்வதற்காக பல வாய்ப்புகள் வழங்கப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் 15.02.2023 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் தோன்றாதரப்பினராக அறிவிக்கப்பட்டும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதாலம்,

**4.** **<u>நிறைவேற்றுதல் மனுவில் மனுதாரர் கேட்டிருக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்று தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது</u>.**

மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் என்ற தரப்பில் ஏ.சி.பி.எண்.169/2019-ல் என்ற வழக்கில் 30.01.2020 ம் தேதியிட்ட தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், கூடுதல் தொகையான ரூ.8,37,537/-ஐ வசூல் செய்யும் பொருட்டு 1ம் எதிர்மனுதாருக்கு நோட்டீஸ் அனுப்பியும் ஆஜராகதவரை அடமானம் செய்யப்பட்டுள்ள ஸ்தாவர சொத்தை மதிப்பு நிஷ்கரிக்க நோட்டீஸ் அனுப்பி மதிப்பு போட்டு இஸ்தியார் அனுப்பி மனுவில் கண்ட சொத்தை ஏலம் போட்டு அதன் மூலம் கிடைக்கும் தொகைகளை உளவடைத்துக் கொள்ள உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும் , 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதாலும் இதுநாள் வரையில் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யடவில்லை என்றும், மனுவில் தீர்ப்பாணை பெற்றபின் பின்னோக்கி செல்ல வேண்டிய அவசியமில்லை மனுதாருக்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடன் பெற்றுக்கொண்டதற்காக ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையிலும், நிறைவேற்று மனுவானது தாக்கல் செய்யப்பட்டு 4 வருடங்களுக்கு மேல்நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதி தீர்மானிக்கிறது.

**5.** இறுதியில் நிறைவேற்று மனுவானது செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டும், நிறைவேற்றுதல் மனுவில் கண்டுள்ள சொத்தை பற்றுகை

செய்வதற்கென 21.10.2024 தேதியன்று ஒத்திவைக்கப்படுகிறது. 10 நாட்களுக்குள் படி செலுத்த வேண்டும்.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு வாய்மொழியாக சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4 ம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
Date: 2024.09.04 19:35:12 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.

**பின் இணைப்பு:-**

இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை.

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
Date: 2024.09.04 19:35:18 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.